# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2007 - 2008**
**தமிழ்மொழி - ஆண்டு 6**

வினா 1 **கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

**நோக்கம்:** பாடநூல் அடைவையும் உன்னிப்பு ஆற்றலையும் அளவிடல்.

**புள்ளி :** - *சரியான விடைக்குக் கூட்டினுள் புள்ளடியிட்டால் மட்டுமே சரி.*
- புள்ளடியிடாமல் கோடிடப்பட்ட விடைக்குப் புள்ளியில்லை.

விடை:

1. ஆ) தேன்தமிழ்
2. ஆ) 216
3. ஈ) ழ
4. இ) எல்லாளன்
5. இ) ஒழுக்கம்
6. ஈ) பண்பாடு
7. இ) மானம்
8. ஆ) பெலிவாவி
9. ஆ) நாகரிகம்
10. இ) திருக்குறள்
11. ஆ) போனான்
12. இ) மூத்தோர் சொற்கேள்
13. ஆ) சிங்களவர்
14. ஆ) செம்மை + தாமரை
15. ஈ) இரண்டு
16. ஈ) ஏர்ப்பாட்டு
17. ஆ) செயலுக்குரிய சரியான பொழுதைத் தவறவிடுதல் ஆகாது.
18. ஆ) குற்றமும்
19. அ) எழுவாய்
20. ஆ) கனகசுப்புரத்தினம்
21. ஆ) அன்பு
22. அ) அழகமர்சோலை
23. இ) குமணன்
24. ஆ) சான்றோர்
25. இ) பலவின்பால்
26. இ) இந்துமாவாரி
27. ஈ) நன்மை
28. ஆ) அறுவகை
29. ஆ) மாணவி தங்கை
30. ஈ) அகத்தின்

வினா 2 **கீழ்வரும் பாடலைப் படித்து, கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**நோக்கம்:** செய்யுள் காட்சியைக் கண்டுணர்ந்து வினாக்களுக்கு விடையிறுக்கும் ஆற்றலை அளவிடல்.

**புள்ளி :**
- ஒரு சொல் விடைக்குப் புள்ளியில்லை.
- எழுத்துப்பிழை இருப்பின் ஒவ்வொரு விடைக்கும் 0.5 புள்ளி கழிக்கவேண்டும்.

விடை:

1. இப்பாடலில் வந்த வந்த பறவை காகம்.
2. அப்பறவை கண்டு வந்த புதுமைகளாவன செட்டியார் வீட்டுக் கலியாணமும் சிவன் கோவில் திருவிழாவும் ஆகும்.
3. மீன்பிடிச் சந்தையில் சனக்கூட்டம் காணப்பட்டது.
4. அண்ணன், அக்கா, மாமா ஆகியோர் பிரான்சில் வசிக்கும் உறவினர்களாவர்.
5. அவர்கள் பொங்கலன்று வீட்டிற்கு வருவார்கள்.

வினா 3 **கீழுள்ள பந்தியை வாசித்து, அதனை உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

**புள்ளி :**
- நேரடியான மொழிமாற்றத்தை எதிர்பார்க்க வேண்டாம்.
- உட்கருத்து இருந்தால் சரி.
- முழுமையான கருத்தோட்டமுள்ள வாக்கிய உறுப்புக்கு முழுப்புள்ளி வழங்குக.
- எழுத்துப் பிழையைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

வினா 4 **தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

**நோக்கம்:** பாடநூற்றரவுகளை மனத்திருத்தும் சார்பாற்றலைத் தெரிவினூடாக அளவிடல்.

**புள்ளி :**
- சொற்றொடருக்கு 1 புள்ளி.
- வாக்கிய விடைக்கு 2 புள்ளிகள்.
- ஒரு சொல் விடைக்குப் புள்ளியில்லை.

விடை:

1. வாழ்க்கை நிகழ்வுகளையும் அவற்றால் பெற்ற பட்டறிவுகளையும் இப்பாடல்கள் உணர்த்துவன.
2. பசுவிலிருந்து பெறப்படும் உணவுப் பொருட்கள் பால், தயிர், வெண்ணெய், மோர், நெய் என்பன.
3. பொதும்பர், கா என்றிரு சொற்களும் சோலையைக் குறிப்பனவாகும்.
4. படம் வரையும் திறனும், சிறந்த தமிழ்ப்பேச்சாற்றலும் பழக்கத்திறனால் ஏற்படும் திறமையாகும்.
5. மெய், வாய், கண், மூக்கு செவி என்பவை ஐம்புலன்களாகும்.

வினா 5 **தரப்பட்டுள்ள இலக்கண வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

**நோக்கம்:** இலக்கண மொழியியல் அடைவை வெளிப்படுத்தும் ஆற்றலை அளவிடல்.

**புள்ளி :**
- தெளிவான வெளிப்பாட்டு விடைகளுக்கு முழுப்புள்ளி.
- விடை தெரிந்தும் வெளிப்படுத்தலில் தெளிவின்மை காணின் 1புள்ளி மட்டும்.
- எழுத்துப்பிழை கவனிக்கப்பட வேண்டும்.

விடை:

1. ஆண்பால், பெண்பால், பலர்பால் என்பவை உயர்திணைப் பால்களாகும்.
2. மண்ணுக்காய் விதையுண்ட மாவீரர்கள் துயிலுமில்லங்களில் வாழ்கின்றனர்.
3. இவ் வாக்கியத்தில் **தாமரை** எழுவாய், **மலர்ந்திருக்கிறது** பயனிலை செயப்படுபொருள் **இல்லை.**
4. தன்மை, முன்னிலை, படர்க்கை மூவிடங்களாகும்
5. ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பவை ஐம்பால்களாகும்.

வினா 6 **கீழே காணும் பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

**நோக்கம்:** உரைத்தொகுதியை வாசித்து அதன் உள்ளடக்கத்தை விளங்கிக் கொண்ட ஆற்றலை அளவிடல்.

**புள்ளி :**
- முழுமையான வாக்கிய விடைக்கு முழுப்புள்ளி.
- விடைகள் இயல்பு நடையில் அமையினும் முழுப்புள்ளி.
- சரியான விடையிருந்தும் முழுமையின்றேல் 1 புள்ளி மட்டும்.
- மயக்க விடைகளுக்குப் புள்ளியில்லை.
- எழுத்துப்பிழையைக் கவனிக்க வேண்டும்.

விடை:

1. முழவுகள் தோலினால் ஆனவை.
2. தப்பட்டை பறையுடன் ஒத்திசைக்கப்பட்ட முழவாகும்.
3. மன்னன் படையெடுத்துச் செல்லும்போது போர்முரசு முழங்கப்பட்டது.
4. பரதநாட்டிய நிகழ்ச்சியில் மிருதங்கம் முதன்மை பெறுகிறது.
5. மங்கல நிகழ்வுகளில் மேளம் சிறப்பான இடத்தை வகிக்கிறது.

வினா 7 **கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் நூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக. வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

**நோக்கம்:** சிந்தனை உருவாக்கத்தையும் பேச்சுத்திறனையும் கண்டறிதல். தனது எண்ணக்கருவை எழுத்தில் ஒழுங்குற வெளிப்படுத்தல்.

**புள்ளி :**
- முழுமையான கதையமைப்புள்ள வாக்கியங்களுக்கு முன்னுரிமை.
- முழுமையான கருத்தோட்டமுள்ள வாக்கிய இணைப்பிற்கு முன்னுரிமை.
- உறுப்பமைந்த வெறுமையான வாக்கியங்களுக்கு அரைவாசிப்புள்ளியும் அதற்குக் கீழும்.
- எழுத்துப்பிழை கவனிக்கப்பட வேண்டும்.